REGD. No. M. 6311 | PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 246

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY — THE OFFICIAL ORGAN OF THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: பங்குனி 16உ திங்கள் (29—3—54) ★ ★ ★ வெளியூர்: பங்குனி 17உ செவ்வாய் (30—3—54)

இலங்கையில் தி. மு. க. மீது தடை?

பணம் பாழாகும் படலம்!

இந்திக்கு பல இலட்சம்!

'இந்தி' மொழி ஆதிக்கத்தைத் திராவிட மக்கள் எவ்வளவு வன்மையாகக் கண்டிக்கிறார்கள் என்பது திட்டவட்டமாகத் தெரிந்திருந்தும், டில்லி சர்க்கார் தன் போக்கை மாற்றிக் கொள்ள மறுப்பதுடன், பிடிவாதமாக இந்தியைத் திணிக்கும் சூழ்ச்சியைக் கையாண்டு வருகிறது. இந்தி மொழியைப் பரப்பவும் வலுவடையச் செய்யவும், இந்திய சர்க்கார், அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் ஏறக்குறைய 4 இலட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இது அல்லாமல், ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மற்றும் ஐந்து கோடி ரூபாய் இந்தி வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இங்கிலீஷ்—இந்தி அகராதி தயாரிப்பதற்காக, அலகாபாத்தில் உள்ள ஒரு சங்கத்துக்கு ரூ 60,000 'மான்யம்' தருவதாக சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறது.

கம்யூனிஸ்டு—தி. மு. கழகம் நட்பு காரணமாம்!

—(:)—

தி. மு. க. தரும் தமிழ் எழுச்சி கண்டு கிலி!

போலீஸ் மோப்பம் பிடிக்கிறது

யாழ்ப்பாணம், மார்ச் 29—

இலங்கையில் திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட கழகம் ஆகிய திராவிட இயக்கங்களின் கொள்கைகள் பரவி வருவதைத் தடை செய்யும் முகமாக இலங்கைப் போலீசார் சமீபத்தில் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடுமென நம்பகமான செய்தி கிடைத்திருக்கிறது.

திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் முதலிய ஸ்தாபனங்களின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட இயக்கங்கள் இலங்கையின் பல பாகங்களிலும் பரவிவருவதைக் கண்காணிக்க வேண்டும் என்று கொழும்புத் தலைமைக் காரியாலயம் ஒரு இரகசிய சுற்றறிக்கையை நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள போலீஸ் நிலையங்களுக்கு சடந்த வாரம் அனுப்பியிருப்பதாகத் தெரியவருகிறது.

இக் கழகங்கள் கொழும்பு, புஸல்லாவ போன்ற இடங்களில் கம்யூனிஸ்ட் கட்சியுடன் கள்ளத் தொடர்பு பூண்டிருப்பதாக மேறபடி சுற்றறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறதாம்.

திராவிட இயக்கங்களைத் தடை செய்வதற்கு அவை இலங்கையில் தமிழ உணர்ச்சியை வாலிபரிடையே அபரிமிதமாக தட்டி எழுப்புகின்றன வென்பதும் ஒரு காரணமாய் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

திராவிட திராவிட முன்னேற்றக் கழகங்களைப் பற்றிய விசாரணைகள் மட்டுமென்றி அந்த இயக்கங்களைச் சேர்ந்த பத்திரிகைகள், புத்தகங்கள் ஆகியவற்றை முழுமூச்சாகப் படிப்பவர்கள், விற்பனை செய்பவர்கள் யார் யார் என்றெல்லாம் சல்லடை போட்டுத் தேடி புள்ளிவிவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகளிடம் போலீசார் சென்று அங்கத்தவர்களின் பெயர்கள், அவர்கள் இருக்குமிடங்கள், கழகத்தின் வேலைகள் என்பன குறித்து கேள்விமேல் கேள்வி போட்டு விசாரித்தனராம்.

முக்கியமாக இந்தியாவைச் சேர்ந்தவர்கள் யார் யார் அங்கத்தினராயிருக்கிறார்களென்பதில் விசேட அக்கறை காட்டப்படுவதாகத் தெரிகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரஸ் "மார்க்கெட்" நிலவரம்

—(:)—

காமராஜர் கடையில் கிராக்கி ஏறுகிறது

டாக்டர் சுப்பராயனுக்குப் பிளாஸ்?

★

சென்னை, மார்ச் 29

புதிய முதலமைச்சர் தேடும் படலம் கனஜோராக நடைபெறுகிறது; கடந்த இரண்டு ஆண்டுகளாகக் காணப்படாத அளவு உற்சாகம் காமராசர் கம்பெனியில் ஏற்பட்டிருக்கிறது; காமராஜரின் கண் பார்வை தன்மீது விழவேண்டும் என்று, காங்கிரஸ் எம். எல். ஏ.-க்களில் பலர், புன்னகையுடன் மாளிகை நோக்கி நிற்கிறார்கள்.

என்னுடன் 28 பேர்! என் கட்சியில் 33! என் பக்கம் செட்டிநாடு! மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி வட்டத்தில் என் பேச்சுக்கு எதிர்ப் பேச்சு பேச ஆள் கிடையாது! எனக்கு இருக்கும் நிர்வாக அனுபவம் போல, இந்த சட்ட சபையிலே வேறு யாருக்கு உண்டு? — இப்படியெல்லாம், பேசிக்கொண்டு, கழுத்தை நீட்டுகிறார்கள், மாலைக்கு!

'சென்ற தேர்தலில், என்னைத் தோற்கடித்துவிட்ட பிறகு, அத்தோடு என் அரசியல் வாழ்வே அஸ்தமித்து விட்டது என்று பலர் ஆருடம் கூறினார்கள்; ஆனால்........! 'பாரத தேவி'யின் துணையால், இதோ நான் இப்போது மந்திரியாகத்தான் இருக்கிறேன்; ஐயம்பேட்டை ஜோதிடர் இதை அப்போதே சொன்னார்; இப்போதும், சான்சு' எனக்குத்தான்!'—என்று அமைச்சர் பக்தவத்சலம் பேசி வருவதாக அவர் கூட்டாளிகள் குதூகலத்துடன் கூறி வருகின்றனர்.

ஆனால், 'அதிருஷ்டம்' டாக்டர் சுப்பராயனுக்குத்தான் அடிக்க இருக்கிறது என்ற பேச்சு வலுவடைந்து வருகிறது. டாக்டர் சுப்பராயன், செட்டி நாடு ராஜா வின் துணையைப் பெற்று, சட்ட சபையில் வலிவுடன் இருக்க முடியும் என்று கூறப்படுகிறது.

இன்னும் இருபத்தி நாலு மணி நேரம்! காமராஜர் கடையில் கிராக்கி, விநாடிக்கு விநாடி ஏறுகிறது!!

நடுக் கடலில் கப்பலில் தீ!

அல்ஜீயர்ஸ். மார்ச் 28—

வடக்கு ஆப்பிரிக்கா அல்ஜீயர்சிலிருந்து 32 மைல் தொலைவில் பிரிட்டிஷ் துருப்பு கப்பல் "எம்பயர் விண்ட்ரஷ்" தீ விபத்துக்குள்ளாகியது. 4 மீட்சி கப்பல்கள், பெண்கள் குழந்தைகள் உள்பட 160 பேரையும், 1,268 துருப்புகளையும் காப்பாற்றின.

மன்னரை விரட்டிய மாவீரர்களிடை மல் யுத்தம்

மன்னர் ஒருவர் சமரசம் காண வந்திருக்கிறார்

நைல் நதிப் பகுதியில் நவரச நாடகம்

நைல் நதி எழிலுடன் பாயும் எகிப்து நாட்டிலே, இப்போது நவரச நாடகமொன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் சம்பவம், அங்கு இப்போது, ஆர்ப்பரிப்பு, கண்டனக் கூட்டம், திடீர் மாறுதல்கள், கட்சிக் கூச்சல்கள், அறிக்கைகள், மறுப்பு அறிக்கைகள் என்ற உருவில் நடைபெற்ற வண்ணம் இருக்கிறது. மணிக்கு மணி, நிலைமை மாறுகிறது. திட்டமிட்டு, இன்னதுதான் நடைபெறும் என்று கூறுவதற்கு முடியாத சூழ்நிலை, எகிப்தில் இருக்கிறது.

மக்களின் நலனை மதியாது இருந்துவந்த பாரூக் மன்னனை விரட்டி, மக்களை ஒரு மதோன்மத்தனின் பிடியிலிருந்து விடுவித்த மாவீரர்களுக்கிடையிலே, இப்போது மற்போர் நடைபெறுகிறது! அவர்களைக் கேலி செய்வதுபோல, இந்த மாவீரர்களின் மல் யுத்தத்தை நிறுத்தி வைத்து, சமரசம் உண்டாக்க வேறோர் மன்னர் வந்திருக்கிறார்.

ரயில் நிறுத்தத் தோழர்கட்கு 5 நாள் சிறை தண்டனை

—(:)—

8 மாதத்திற்குப் பிறகு இந்தத் தீர்ப்பு!

அரக்கோணம், மார்ச் 26—

ஜூலை 15-ந் தேதி தோழர் ஏ. எஸ். சி. கிருஷ்ணசாமி தலைமையில் சென்று மின்னலில் ரயில் நிறுத்தம் செய்த தோழர்கள் நடேசன், சண்முகம் ஆகியவர்களுக்கு ரூ 5 அபராதமும், கட்ட தவறினால் 5 நாள் வெறுங்காவல் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

தோழர்கள் அபராதம் கட்ட மறுத்து, முகமலர்ச்சியுடன் சிறை சென்றனர்.

புலவர் காகரத்தினம், முத்தன் ஆபெவர்களுக்கு அதே குற்றத்திற்காக கோர்ட்டு கலையும்வரை தண்டனை என வழக்கை விசாரித்த அரக்கோணம் சப்-மாஜிஸ்திரேட் தீர்ப்பளித்தார். சிறை தண்டனை விதிக்கப்பட்ட தோழர்கள் அரக்கோணம் சப்-ஜெயிலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் குருவராஜப்பேட்டை தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள்.

நகைப்பும்—நாசிசும்

நைல் நதி நீரத்திலே கம்பீக்கை நாதம் இசைத்த மாவீரர்கள்—நகீபுக்கு மக்களின் பேராதரவு அமோகம்; நாசிருக்கு இராணுவம் விசுவாசம் காட்டுகிறது. இருவருமாகச் சேர்ந்து எகிப்தை, முழு விடுதலை பெற்ற குடி அரசு ஆக்குவதற்கான பணியிலே, மும்முரமாக முனைந்திருந்தனர்; மக்கள் அவர்களை ஆசிர்த்தனர்; ஆங்கில ஏகாதிபத்தியமும் அஞ்சிக் கிடந்தது.

ஆனால், ஒரு திங்களாக, அவர்களுக்கிடையே, போட்டியும் பொறாமையும் பூசலும் கிளம்பி, நிலைமை பாழ்பட்டு வருகிறது.

"இராணுவ ஆட்சி இனி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 29—3—1954 திங்கள்

சுப்ரமணியத்தின் சாகசம்!

கனம் ஆச்சாரியார் அவர்கள் வரட்டு அகங்காரத்தில் தலைசிறந்தவர் என்ருல், அவருடைய வாரிசு கனம் சுப்ரமணியம் முன்கோபத்துக்குப் பெயர் பெற்றவராம். இருந்தாலும் இவ்வளவு முன்கோபம் இருக்கக் கூடாது என, அவருடைய ஸ்வீகாரப் பிதாவே, அடிக்கடிக்குக் கல்வி அமைச்சரை எச்சரித்த வண்ணம் இருப்பாராம். கல்வி அமைச்சரின் இந்தக் கோப சுபாவத்தை, எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர் சட்டசபையில் எடுத்துக்காட்டியபொழுது, இத்துறையில் தமக்கு ஏற்கனவே ஆச்சாரியார் திருவாய் மலர்ந்தருளியுள்ள உபதேசத்தையும் எடுத்துக்கூறி, சினத்தைத் தவிர்க்க முயற்சிப்பதாகக் கல்வி மந்திரி குளுரைத்தாராம்.

ஒருவருடைய சுபாவம், ஒருநாள் முயற்சியால் மாறிவிடாது. பலநாள் முயற்சியும் கோரிய பலன் கட்டாயம் கொடுக்கும் என நம்ப முடியாது. எனவே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது கனம் சுப்ரமணியம் பேசியதிலும், விவாதத்திற்கு பதில் தந்ததிலும் வழக்கத்திற்கு மாறுகக் காணப்பட்ட பணிவும் குழைவும், அதன் விளைவாக வந்ததுதான் என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை.

புதிய தொடக்கக் கல்வித் திட்டத்தை, சட்டசபை அனுமதி பெருமலும், பெற வேண்டுமே என்ற நினைப்புகூட கொள்ளாமலும், சொந்தக் கட்சியினரைக்கூட கலக்காமலும் தான் ஒரு உத்திரவின் மூலம் கனம் ஆச்சாரியார் அமுலுக்குக் கொண்டு வந்தார். திட்டத்திற்கு எதிர்ப்பு கிளம்பினதும், எதிர்ப்பு என்ன செய்யும் என, எதிர்ப்பின் வன்மை அறியாக் காரணத்தால், ஏளனமாகப் பார்த்தார். கேலியாகப் பேசினுர். எதிர்ப்பு விரிவடைவதைக் கண்டதும், எரிவுள்ளம் கொண்டவராய், புத்தர், இயேசு, நபி என்ற புனிதப் பெயர்களை முன்தள்ளி, "பொது மக்களைக் கேட்டா இவர்கள் நடந்து கொண்டார்கள்? பொது மக்களைக் கேட்டு நடக்க வேண்டிய கட்டாயம் எனக்கும் கிடையாது" என ஆச்சாரியார் ஆணவக் குன்றேறி நின்று உளறிவழிந்தார்.

சிறு பொறியாகக் கிளம்பிய தீ, காலப் போக்கில் பெருநெருப்பாகப் பரிணமித்து விட்டதைக் கண்ட, காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் ஆச்சாரியாரின் ஆணவ திட்டத்தை அறவே கூடாதென்றனர்; திட்டத்தைக் கூடாதென்றதைக் கேட்டதும், திட்டத்தைக் கைவிட கனம் முன்வந்திருந்தால், சொந்தக் கட்சியினர் எதிர்ப்பு ஆணவ அமைச்சரை அகற்றியாக வேண்டும் என்று அடம் பிடிப்பதில் வந்து முடிந்திருக்காது. அந்தக் கட்டத்திலும் கூட, ஆச்சாரியார் கொஞ்சம் நாவடக்கமாக நடக்க முயன்றிருந்தாலாவது, சொந்தக் கட்சியினரிடம் மூண்ட எதிர்ப்பு தானுகத் தணிந்துபோய் இருக்கும். எதிர்ப்புக்கான காரணம் ஒன்ருக இருக்க, சொந்தக் கட்சி எதிர்ப்பாளர்களைக் குறித்து மிகமிக அற்பத்தனமாக வசை பாடி தூற்றத் தொடங்கினுர். சொந்தக் கட்சியினர் மீது, தம்மை பின்தொடர்ந்து அலையும் வளர்ப்புகளை உசுப்பிவிட்டு, வேடிக்கை பார்த்து, வெற்றி பெற்று விட்டதாக வீண் கனவு கண்டு மகிழ்ந்திருந்தார் ஆச்சாரியார். இறுதியாக, உள்ளதை மறைத்து, இல்லாததின்மீது பழி சுமத்தி, பதவியிலிருந்து செலவு பெற்றுக் கொள்ளப் போகிறேனென, வெளிப்படையாகப் பறைசாற்ற வேண்டிய நிலைமையில் வந்து நின்று விட்டார், அன்பர் ஆச்சாரியார்!

கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசிய கல்வி அமைச்சர் "பருலேகர் குழு சிபார்சுகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு முன்பாக, நான் எனது அமைச்சர் கட்சியைக் (காங்கிரஸ்) கலந்தாக வேண்டும்; அதன் கட்டளையை நான் மேற்கொள்ள வேண்டும்," என விளக்கமாகக் கூறி இருக்கிருர். சொந்தக் கட்சியினர் ஒப்புதல் கிடைத்த பிறகு, "அது பற்றிய உருவான நடைமுறைகளை சட்டசபையின் விவாதத்திற்கு வைத்து, சட்டசபை முடிவுகளை சர்க்கார் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளும்" எனவும் சுப்பிரமணியம் செப்பி இருக்கிருர். அமைச்சர் குழு என்பது எதேச்சாதிகாரமாக இயங்கக் கூடிய ஒரு அமைப்பு அல்லவெனவும், அதைத் தாங்கி இருக்கிற கட்சி என ஒரு காங்கிரஸ் கட்சி உயிருடன் இருந்து வருவதாகவும், இப்பொழுது கனம் சுப்ரமணியம் விளக்கிப் பேசுகிருர். அந்தக் காங்கிரஸ் கட்சிக்கும் அதன் பெயரால் அமைந்துள்ள அமைச்சர் குழுவிற்கும் உள்ள தொடர்பு பற்றியும் அமைச்சர் அறிவுரை தந்திருக்கிருர். அதாவது, காங்கிரஸ் கட்சி இடும் ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே அதன் அமைச்சர் குழுவின் நீங்காக் கடமையாகும் எனவும் வலியுறுத்திக் கூறுகிருர் அமைச்சர். அத்துடனும் அவர் நின்று விடவில்லை. சொந்தக் கட்சியின் கட்டளையை சட்டசபைக்குக் கொண்டுவந்து விவாதத்திற்கு விட்டு, சட்டசபை ஒப்புதல் பெற்று அமைச்சர் குழு ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமெனவும், மக்களாட்சி தத்துவப் பிரசாரம் செய்திருக்கிருர் கல்வி அமைச்சர். சட்டசபையை ஒரு கல்லூரி வகுப்பாகவும், சட்டசபை உறுப்பினர் அனைவரையும் மாணவர்களாகவும், தம்மை ஒரு அரசியல் தத்துவப் பேராசிரியராகவும் பாவித்துக் கொண்டு, கல்வி அமைச்சர் கனம் சுப்ரமணியம் வியாக்கியானம் செய்திருக்கிருர்.

பொதுவாக ஒரு அமைச்சர் குழு உருப்படியாக எடுத்துக்கொள்ளும் ஒரு திட்டம், எத்தனை வாயில்களைக் கடந்து, உறுதியாக சட்ட புத்தகத்தில் இடம் பெற்று நாட்டில் அமுலாக்கப்படுகிறது என்பது குறித்து கல்வி அமைச்சர் கொடுத்துள்ள விளக்கத்தை அனைவரும் ஒப்புவர். ஆனுல், அவர் குறிப்பிட்டுள்ள முறைப்படிதான், புதிய கல்வித் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டதா என்பதை அதே அமைச்சரே சிந்தித்துப் பார்ப்பாரானுல், அவரே தமது குருநாதரின் எதேச்சாதிகாரப் போக்கிற்கு இரத்தக்கண்ணீர் சிந்துவார் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வளவு விளக்கம் தருகிற அமைச்சர், அவ்விளக்கப்படி கொண்டுவந்து அமுல் நடத்தப்படாத புதிய கல்வித் திட்டத்தை மரியாதையாக வாபஸ் பெற்றுக் கொண்டிருக்க வேண்டியதுதான் நியாயமாகும் ஆனுல், அமைச்சரோ, ஒப்புக்காவது திட்டம் நடைமுறையில் மட்டும் இருந்தால் போதும் என்ற போக்கிலேயே பேசியும், சட்டசபை ஒப்புதல் பெற்றுமிருக்கிருர். தமது சுபாவமான சினத்தை மாற்றிக்கொண்டு, சாகசத்தைக் கையாண்டு கல்வி அமைச்சர் இத்தருணத்தில் வெற்றி பெற்று இருக்கிருர். சாகசம்கூட கொஞ்ச காலைக்குத்தான் செல்லுமேயல்லாது நிரந்தரமாக என்றென்றும் செல்லாது என்ற உண்மையைக் கல்வி அமைச்சர் உணர வேண்டும்.

காலரா கண்டவன், தருணத்தில் தரப்படுகிற தக்க சிகிச்சையினுல் பிழைத்துக் கொண்டாலும்கூட, அவன் படுத்திருந்த பாய், தலையணை, பயன்படுத்தி இருந்த துணி முதலியனவெல்லாம் தீக்கிரையாக்கப்பட்டு, அந்த வீட்டிலும் நோய் தடுப்பு மருந்து தெளிக்கப்படுவது போன்ற நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுவதை அமைச்சர் அறியாதவர் அல்ல அதைப்போல் திட்டம் அறவே தொலைக்கப்பட்டு, அமைச்சராகும் இனி எவரும் எதேச்சாதிகாரமாக நடந்து கொள்ளாதிருக்கும் மனம் பெறுகிற வரையில், பொதுமக்கள் எதிர்ப்பு அடங்காது அவ்வெதிர்ப்பை, கனம் சுப்ரமணியத்தின் சாகசத்தால் அடக்கவும் முடியாது.

"எங்கள் பண்பாடுகளை மதித்து நடக்கப் பழகுங்கள்"

—:o:—

'பாக்கும் வெற்றிலையும் எங்கட்கு பலனுள்ள உணவுப் பொருள்கள்'

மக்கள் சபையில் டாக்டர் மதுரம் பேச்சு

"வெற்றிலையுடன் உபயோகிக்கப்படும் பாக்குமீது இறக்குமதிவரி விதிக்கப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவைச் சேர்ந்த எனக்கு, தென்னுட்டினருக்கு வெற்றிலைப் பாக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பது நன்ருகத் தெரியும். வெற்றிலைப் பாக்கு இல்லாத வீடே இல்லை என்று சொல்லலாம். பொதுவானதும், தனிப்பட்டதுமான எந்த விழாவாயினும், வெற்றிலைப் பாக்கு இல்லாவிடின் முழுமையுருது. ஒவ்வொரு முறையும் சாப்பாட்டிற்குப் பிறகு இன்றியமையாத ஒன்ருக, பழங்காலந்தொட்டு, வெற்றிலை பாக்கு, தென்னுட்டினரால் உபயோகிக்கப்பட்டு வருகிறது. வெற்றிலை பாக்கு, தென்னிந்தியரின் கலாசாரத்தின் ஒரு பகுதி. பலருக்கு, உண்ணவோ, குடிக்கவோ எதுவுமில்லாவிடினும், வெற்றிலை பாக்கு மட்டுமிருந்துவிட்டால் வேலை செய்வதற்கும் போதுமானதென்றெண்ணி வேலையிலீடுபடுவர்."

"வெற்றிலை பாக்குடன் சிறிது சுண்ணாம்பும் சேர்த்து அவர்கள் உட்கொள்வதால், உடலுக்குத் தேவையான சுண்ணாம்புச் சத்தும் இதில இருக்கிறது. நான் ஒரு மருத்துவன் என்ற முறையில் சொல்கிறேன், ஏழைகளுக்குத் தேவையான, சுண்ணாம்புச் சத்து, அவர்கள் வெற்றிலை போடுவதினுல் மட்டுமே கிடைக்கிறது. இதற்கும் அப்பால் வெற்றிலை பாக்குச் சுவைப்பது நல்ல ஜீரண சக்தியையும் தரக்கூடியது. ஏழைகளின் இன்றியமையாத ஒன்று. எனவே, பாக்கின் மீது வரி விதிப்பதினுல், அதன் விலை உயர்வு ஏழைகளைப் பெரிதும் பாதிக்கக்கூடியது; எனவேதான், நான் நிதிமந்திரி அவர்களை, பாக்கு மீது வரி விதிப்பதை கைவிட்டுவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்,"

—இவ்வாறு, மத்திய அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது (திருச்சி) மக்கள் சபை உறுப்பினர் டாக்டர் பரமதுரம் அவர்கள், 18—3—54 அன்று ஆற்றிய சொற்பொழிவில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது:—

"மத்திய அரசாங்கம் புதிதாக விதிக்கவிருக்கிற வரிகள் இந்த நாட்டின் பெரும்பாலான ஏழை மக்களைத்தான் பாதிக்கவிருக்கிறதேயன்றி, பெரும் பணக்காரர்களையல்ல. புதிதாக, காலணிகள் (செருப்பு) மீதும், வெற்றிலையுடன் உபயோகிக்கும், பாக்கின் மீதும் மத்திய அரசாங்கம் வரி விதிக்க முனைந்திருக்கிறது.

காலணிகளில் கையால் செய்யப்படுபவை, யந்திரத்தால் உற்பத்தியாகுபவை என இரண்டு வகைகள் உண்டு. கையால் செய்யப்படும் காலணிகளே, காடு மேடுகளில் நிறைந்திருக்கும் கல்லிலிருந்தும், முள்ளிலிருந்தும் தன் கால்களைக் காத்துக்கொள்வதற்காக பெரும்பாலான ஏழை மக்களால் உபயோகிக்கப்பெறுகிறது. யந்திரத்தால் உற்பத்தியாகும் காலணிகளெல்லாம் பெரும்பாலும், ஆடம்பரப்பிரியர்களாலும், பணக்காரர்களாலுமே உபயோகிக்கப்படுகின்றன. மதிப்பிற்குரிய நிதி மந்திரி அவர்கள், கையால் செய்யப்பட்டு உபயோகிக்கப்படுகிற காலணிகளுக்கு சுங்க வரி விதிக்காமல் விதிவிலக்களிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

மேலும் டாக்டர் மதுரம் அவர்கள், சோப்பின் மீது வரி விதிப்பையும் கண்டித்துப் பேசினுர்.

தென் பெண்ணையாறு நதிமீது பாலம்

டில்லிக்கு சென்னை கடிதம்

சென்னை, மார்ச் 25—
கடலூர், சித்தூர் ரோடில் திருக்கோயிலூர் அருகே தென் பெண்ணையாற்றில் பாலம் கட்டுவதை மானிய உதவி பெற்ற கட்டப்படும் திட்டமாகக் கருதாமல், மாநில 5 ஆண்டுத் திட்டத்தில் இதைச் சேர்க்கவேண்டுமென்றும் மத்திய சர்க்காருக்கு சென்னை சர்க்கார் கடிதம் எழுதியிருப்பதாக சட்டசபையில் மராமத்திலாகா மந்திரி கூறினுர்.

இந்தியாவில் காப்பி மகசூல் அதிகம்!

பம்பாய், மார்ச் 25—
1953—54ல் இந்திய காப்பி மகசூல் 25,500 டன்கள் என்றும், இந்த நூற்ருண்டிலேயே இந்தியாவில் காபி இவ்வளவு அதிகம் விளைவது இதுவே முதல் தடவையாகும் என்று அறியப்படுகிறது.

பஸ்லுல் ஹக்கின் போர் முரசு!

டாக்கா, மார்ச் 26—
கிழக்குவங்காள வருங்கால முதல் மந்திரியான பஸ்லுல் ஹக் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில், "பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையை உடனே கலைத்துவிட வேண்டும்; முகம்மது அலியைப் பிரதமராகக் கொண்ட மந்திரி சபை ராஜிநாமா செய்ய வேண்டும்; பாக்—அமெரிக்க இராணுவ ஒப்பந்தத்தை உடனே நிராகரிக்க வேண்டும்," என்று குறிப்பிட்டார்.

பிறந்த நாட்டிற்குச் செல்லத் தடை!

கராச்சி, மார்ச் 26—
கான் அப்துல் கபார்கான் தான் பிறந்த இடமாகிய எல்லைப்புற மாநிலத்திற்குள் இடமே போகக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக பாகிஸ்தான் பார்லிமெண்டில் பிரதம மந்திரி தெரிவித்தார். சந்தர்ப்பம் ஏற்படும் போது தேசத்தின் பந்தோபஸ்தை யொட்டி தடைகள் தளர்த்தப்படும் என்ருர்.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

24—3—54-ந் தேதி இதழில் வெளியிட்ட கூட்டுத் தொகை	16,709—7—5
25-3-54-ல் வெளியிட்ட தொகை	4,107—4—9
சென்னை 18-வது வட்டம் புளியந் தோப்பு தி. மு. கழகம்	50—0—0
எ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் மூலம்:—	
பென்னாத்தூர் தி. மு. கழகம்	10—0—0
ஆத்திப்பட்டு சீனிவாசன்	1—0—0
பென்னாத்தூர் சொக்கநாதன்	1—0—0
„ கூட்ட உண்டி வசூல்	6—8—8
மாப்பம்பாடி விஸ்வநாதன்	1—0—0
மதுரை ஆ ரத்தினம்	7—0—0
„ டி. எ. எஸ். பகவதின்	5—0—0
„ சே. ராஜரத்தினம்	5—0—0
„ என். ராமச்சந்திரன்	0—8—0
„ பி. பகவதி	5—0—0
„ கிருஷ்ணன், கணபதி, ராம்ராம்	1—8—0
கோலாலம்பூர் (மலேயா) அ. ப. ஆறுமுகம்	15—0—0
„ மாரியப்பன்	15—0—0
„ ஆ. வெ. ஆண்டியப்பான்	15—0—0
„ ஆர். வைத்தியலிங்கம்	7—8—0
„ திருவேங்கடம்	7—8—0
„ ப. மு கா. வீராசாமி	3—0—0
„ ஆ கருப்பையா	8—0—0
கும்பகோணம்—குடவாசல் பொதுக் கூட்டங்களில் பொதுச்செயலாளர் அவர்களிடம் (விபரம் பின்னால்)	400—7—9
வேலூர் பொதுக் கூட்டத்தில் தோழர் நெடுஞ்செழியன் மூலம்	57—0—6
இளம்பிள்ளை மு. கருணாநிதி படிப்பகத்தார்	8-15-11
„ உண்டியல் வசூல்	2—0—1
வேம்படிதாளம் மா. சித்தராசு	1—0—0
தோழர் க அன்பழகன் இலங்கைப் பயணத்தின்போது கொழும்புத் தோழர்கள் சேர்த்த விபரம்:—	
திருகோணமலை தோழர் சிவகுரு வசூலித்தது:—	
கே. திருநாவுக்கரசு	5—0—0
எம். சண்முகம்	5—0—0
ஜி. பிரான்சிஸ்	5—0—0
வே. செல்லையோசன்	3—0—0
எஸ். தம்பிதுரை	3—0—0
கே சிவகுரு	2—0—0
வி. மாணிக்கம்	2—0—0
எஸ். குருசாமி நாடார்	2—0—0
எஸ். மரியாம் பிள்ளை	2—0—0
மா. கதிரேசு	2—0—0
வே. பால்சாமி நாடார்	1—0—0
ஏ மயிலூர் நாடார்	1—0—0
எஸ். அந்தோணி	1—0—0
எம். சுப்பையா	1—0—0
ஜு சுப்ரமணியம்	1—0—0
சி. பாலசுந்தரம்	1—0—0
எம். சதக்கதுல்லா	1—0—0
பி. இஞ்னேஷஸ்ராசன்	1—0—0
நாகசாமி	1—0—0
ஜமால்தீன்	1—0—0
என். மயில்வாகனம்	1—0—0
எம். கிருஷ்ணபவம்	1—0—0
மகாலிங்கம்	1—0—0
எஸ். பால்பாண்டியன்	1—0—0
இராசமணி	1—0—0
ஞானைய நாடார்	1—0—0
இராசு ஆனந்தன்	1—0—0
அவிசாவெல்ல (இலங்கை) தி. மு. கழகம் என். பாண்டியன் மூலம்	51—0—0
நாவலப்பிட்டி (இலங்கை) தோட்டப் பொங்கல் விழாப் பொதுக்கூட்ட வசூல்	12—0—0
தலைக்கொல்லை செட்டி கருஞ்சிவலை	2—0—0
கே. பால்துரை	2—0—0
பி. கே. வி. சாமி	1—8—0
சென்னை — புரசவாக்கம் அறிவு வளர்ச்சி மன்றம் க. அன்பழகன் மூலம்	5—0—0
சேலம் நகரப் பொதுக் கூட்டத்தில் சேலம் நகர் தி. மு கழகத்தார் பொதுச்செயலாளரிடம் அளித்த தொகை (விவரம் தனியாக)	815—3—9
ராசிபுரம் பொதுக் கூட்டத்தில்	184—2-11
சர்க்காவேலி	3—2—0
தர்மபுரி பொதுக் கூட்டத்தில்	413—0—0
மேட்டூர் அணை பொதுக்கூட்டத்தில்	187-15—0
வேலூர்—சேலம் பொதுக் கூட்டத்தில்	364—9—3
நல்ல சமுத்திரம் பொதுக்கூட்டத்தில்	174-14—3
ஆத்தூர் பொதுக் கூட்டத்தில்	317-10—3
ராசிபுரம் பொதுக்கூட்டத்தில் பெயர் சூட்டல் நன்கொடை	2—0—0
பாலமேடு தி மு கழகம்	10—0—0
உதகமண்டலம் மவுண்டன் நியூஸ் மார்ட் வாயிலாக	5—0—0
திருச்சி தேவர் மன்றத்தில் நடந்த "வீர்திய வீரன்" நாடகத்தில் வசூலானது, தோழர் ஜேவியர் மூலம்	300—0—0
செங்கல் தி. மு. கழகம்: திருச்சிப் பொதுக்கூட்டத்தில்	11—0—0
மணக்கல் தி. மு. கழகம்	5—0—0
திரும்பேடு கிராமம் பொ. கிருஷ்ணன்	5—0—0
கோகூர் தி. மு. கழகம்	10—0—0
சென்னை கே. எம். கண்ணபிரான் மூலம்	5—0—0
ஆரணி கிருஷ்ணா சில்க் பாக்டரி தொழிலாளர்கள்—பொ கிருஷ்ணன் மூலம்	3—8—0
சென்னை 20-வது வட்டம் தி.மு கழகத் தோழர்கள் தோழர் நெடுஞ்செழியன் மூலம்:—	
எஸ். ஜெகதீசன்	3—0—0
இளமதி	2—0—0
கபிலன்	1—0—0
என். கணேசன்	1—0—0
நலங்கிள்ளி	1—0—0
பி. பி. ஏகாம்பரம்	1—0—0
டி என். ஜே ஆர். பாரதி	1—0—0
ச. கன்னியப்பன்	1—0—0
வி. என் ராமச்சந்திரன்	1—0—0
ந. லோகநாதன்	1—0—0
எம். ஆஞ்சநேயன்	2—0—0
என். ஆர். கிருஷ்ணசாமி	1—0—0
மோகனரங்கம்	1—0—0
ஆர். வாசுதேவன்	2—0—0
எம் வேதாசலம்	1—0—0
அர்ச்சுனன்	1—0—0
சொக்கலிங்கம்	1—0—0
சாமுவேல்	1—0—0
பார்த்தசாரதி	1—0—0
சண்முகம்	1—0—0
ஆ. தர்மலிங்கம்	1—0—0
மு குமரன்	1—0—0
மதிவாணன்	2—0—0
பி. என். ராசன்	3—0—0
கே. சி. சேகர்	1—0—0
ஒ. ஆர். ரங்கன்	1—0—0
வி. நாகபூஷணம்	1—0—0
ஜி தங்கவேலு	1—0—0
மோகனராஜ்	1—0—0
குருநாதன்	1—0—0
சண்முகம்	1—0—0
மு. நாராயணசாமி	2—0—0
க. சண்முகம்	1—0—0
கே. சுப்ரமணியம்	1—0—0
பி. என். மனோகரன்	1—0—0
இறை ஒளி	1—0—0
எ. பொன்னம்பலம்	1—0—0
முனிரத்தினம்	1—0—0
வே. மு ராமச்சந்திரன்	1—0—0
ராஜமாணிக்கம்	1—0—0
என். லோகநாதன்	1—0—0
எம் நடராசன்	1—0—0
கிருஷ்ணப்பன்	1—0—0
வீரபத்திரன்	1—0—0
எம். தர்மன்	1—0—0
சாரங்கன்	1—0—0
தணிகாசலம்	1—0—0
துரைக்கண்ணு	1—0—0
டி. ஆர். ராகவன்	1—0—0
க. முனிரத்தினம்	1—0—0
லோகநாதன்	3—0—0
உதயையான்	2—0—0
ராமச்சந்திரன்	1—0—0
பழனிவேலு, சுப்ரமணி, கலைமணி, கண்ணன், விஜயரங்கம், சுந்தரம், மழுவழகன், சீதாராமன், சுந்தர வடிவேலு, சிவசங்கரன், கண்ணன் திருவேங்கடம், ஆதிமூலம், தர்மலிங்கம், ரங்கநாதன், சக்கூர், சீனன், அப்துல்வகாப், ராஜேந்திரன், அருணாசலம், தங்கராஜ், காருண்யமூர்த்தி, ராஜகோபால், தாமோதரன், கிருஷ்ணன், தாசன், கோவிந்தன், கணேசன், ராமதாஸ், வீரபத்திரன், தேவன், தட்சணாமூர்த்தி, நடராசன், ராமசாமி, புருஷோத்தமன், ராமன், முத்துகிருஷ்ணன், சிவராமகிருஷ்ணன், டில்லிபாட்சா, நடராசன், மோகனம், கண்ணன், குமாரவேலு, இளம்பரிதி, ஏகாம்பரம், ஜெயரத்தினம், சாமி, விஸ்வநாதன், செல்வநாதன், குட்டியப்பன், சிதம்பரம், கல்யாணசுந்தரம், ராஜேந்திரன், அந்தோணி, கண்ணப்பன், சின்னதம்பி, விக்டர், செங்குட்டுவன், தங்கவேலு, நாராயணன், சுல்தான் குப்புசாமி, அகஸ்டின், பட்டாபி, அருள்தாஸ், தணிகாசலம், கந்தசாமி, ஆறுமுகம், தினகரன், பன்னீர்செல்வம், கிருஷ்ணன், ஞானி, டில்லி, பத்மநாபன், வேலாயுதம் ஆகியோர்	35—0—0
இந்தியா பிஸ்டன் கம்பெனித் தொழிலாளர்கள் நெடுஞ்செழியன் மூலம்	10—4—0

(4-ம் பக்கம் பார்க்க)

இந்திக்கு இடிமேல் இடி!

— (:) —

பம்பாய்சர்க்கார்கட்டளைக்கு எதிராக அறப்போர்

பூனா பல்கலைக் கழகத்திற்குத் துணையாக மராத்தி மொழியினர் கிளர்ச்சி

பூனா, மார்ச் 25—

பம்பாயில் உள்ள பல்கலைக் கழகங்கள் அனைத்தும் இந்தியை போதனா மொழியாகக் கொள்ள வேண்டும் என பம்பாய் சர்க்கார் கண்டிப்பான உத்திரவு இட்டிருக்கிறது. அதை எதிர்த்து, இந்தி மொழிக்கு பதிலாக, மராத்திய மொழியைத்தான் போதனா மொழியாகக் கொள்ளுவது என பூனா பல்கலைக் கழகம் முடிவிற்கு வந்திருக்கிறது.

பூனா பல்கலைக் கழகத்தில் அக்கறை கொண்டுள்ள முக்கியஸ்தர் சிலர், அதன் நிர்வாகப் பொறுப்பில் உள்ள சிலருடன் இணைந்து அமைதியான போராட்டத்திற்கான திட்டங்களைத் தீட்டியுள்ளதாக அறியக் கிடைக்கிறது.

பூனா பல்கலைக் கழகத்தில் இணைக்கப்பட்டுள்ள கல்லூரிகளில் படிப்படியாக, இந்தி மொழிக்கு பதிலாக மராத்தியை போதனா மொழியாகப் புகுத்தப் படுவதற்கான பொதுமக்கள் ஆதரவைத் திரட்ட பரவலாகக் கூட்டங்கள் நடத்துவது என்பது ஒரு ஏற்பாடாகும்.

இந்தியை போதனா மொழியாக்க வேண்டுமென்ற பம்பாய் சர்க்கார் கட்டளை, வட்டார மொழிகளின் வளர்ச்சிக்காக வட்டார பல்கலைக் கழகங்கள் துவக்கப்பட்டதின் அடிப்படை நோக்கத்திற்கே மாறு தேவைதாக இருக்கிறது.

சம்யுக்த மாராட்டிரம் உருவாக்கப்பட்டால், இயல்பாகவே அதன் ஆட்சி மொழி மராத்தியாகவே இருக்கும். அதுகாலை, பூனா பல்கலைக் கழகம் மராத்தியை தன் போதனா மொழியாகக் கொள்ளவேண்டி வரும். இந்த நிலையில், இந்தியை போதனா மொழியாகக் கொள்வது அவசியமற்றதாகும் என கல்வித்துறையினர் கருதுகின்றனர்.

பல்கலைக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மராத்தியையே வரவேற்கின்றனர். தன்னுரிமைகொண்ட நிலையமாக பல்கலைக் கழகம் இருப்பதால், தன் விருப்பப்படி நடந்துகொள்ள உரிமை உண்டு. அவ்வுரிமையைக் குலைப்பது போல் இருக்கிறது சர்க்கார் முடிவு என பல்கலைக் கழகத்தினர் கருதுகின்றனர்.

சேலம் மாவட்ட தி.மு.க. 2-வது மாநாடு

வரவேற்புக் குழு கூட்டம்

23—3—54ல், மேற்படி மாநாட்டு வரவேற்புக்குழுக் கூட்டம் தோழர் ஜி பி சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டை மே மாதம் 1, 2 தேதிகளில் சேலத்தில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவராக ஜி பி. சோமசுந்தரம், செயலாளராக ப. இராமலிங்கம், துணைச் செயலாளராக ப. கண்ணன், பொருளாளராக பி எம். குப்புசாமி, தொண்டர் படைத் தலைவராக இரா. நாகண்டவன், தொண்டர் படைத் துணைத் தலைவராக பி. எம். கோபால் ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

மாநாட்டின் பூர்வாங்க ஏற்பாடுகள் துவக்கப்பட்டுவிட்டது.

வல்லத்தரசுமீது ஜீவனாம்ச வழக்கு

நீதிபதி குறிப்பு

புதுக்கோட்டை, மார்ச் 25—

1937-ம் ஆண்டில், தோழர் க. மு. வல்லத்தரசு (எம். பி) ஒரு பெண்ணை தன்மானத் திருமண முறைப்படி திருமணம் செய்து கொண்டார்; அவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன; அதில் நடராசன் என்ற சிறுவனைத் தவிர மற்ற குழந்தைகள் இறந்துவிட்டன.

பின்னர் நடராசன் என்ற சிறுவனையும், அவனது தாயாரையும் கைவிட்டு வேறொரு பெண்ணை தோழர் வல்லத்தரசு மணந்துகொண்டார்.

அவருடைய முதல் மனைவியார் தன் மகனுக்கு மாதம் ரூபாய் 50 ஜீவனாம்சமாக கொடுக்கவேண்டுமென்று கோர்ட்டில் வழக்கு தொடுத்தார்.

நீதிபதி தீர்ப்பு கூறுகையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்:-

“தன்மானத் திருமணத்தில் பிறந்த குழந்தைக்கும் ஜீவனாம்சம் உண்டு; நடராசனுக்கு மாதம் ரூ 20 ஜீவனாம்சமாக தோழர் வல்லத்தரசு கொடுக்கவேண்டும்,” என்றார்.

இலங்கை ஊழியர் காங்கிரசார் கைது

துப்பாக்கிப் பிரயோக எதிரொலி

கொழும்பு, மார்ச் 26—

கொழும்புவிலிருந்து 75 மைல் தூரத்திலுள்ள மீரிய கோட் எஸ்டேட்டில் நடந்த 23-ம் தேதியன்று போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது சம்பந்தமாக நேற்றிரவு 51 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 38 பேர் இலங்கை ஊழியர் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது.

கைது செய்யப்பட்ட நபர்கள் நுவரா எலியா மாஜிஸ்திரேட் முன்னர் ஆஜர் செய்யப்பட்டதில் ஊழியர் காங்கிரசைச் சேர்ந்த 38 நபர்களை தலா 150 ரூபாய் ஜாமீன் பேரில் விடுதலை செய்யும்படி உத்திரவிட்டதாகத் தெரிகிறது.

‘தமிழரசி’ பிறப்பு

கடலூர் புதுப்பாளையம் தி. மு. கழக செயற்குழு உறுப்பினர் தோழர் வை. வேலு அவர்களின் மனைவியார் தோழியர் பார்வதி அம்மையார் அவர்கட்கு 19-3-54 அன்று பெண் குழந்தை பிறந்தது. தாயும், சேயும் நலம். குழந்தைக்கு ‘தமிழரசி’ எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ‘நம் நாடு’ இதழுக்கு ரூ 1 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது பொறுப்பாளர்.

புதுவைப் போராட்டத்திற்கு ஆதரவு

—:0:—

விழுப்புரம் நகர சபைத் தலைவர் அறிக்கை

தாயகத்துடன் இணைந்து விடுவதற்காகப் புதுவை—காரைப் பகுதிகளில் நடக்கும் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து, விழுப்புரம் நகர சபைத் தலைவர் தோழர் எம். சண்முகம் அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார் :—

"பிரெஞ்சிந்திய மந்திரி சபையும், நகராட்சி மன்றங்களும் நிறைவேற்றிய தீர்மானங்கள் மறுக்க முடியாத முடிவுகளாகும். ஜனநாயக முறைக்கு மதிப்புக் கொடுப்பதென்றால், பிரெஞ்சு அரசாங்கம், இதை ஒப்புக்கொண்டு, பிரெஞ்சிந்தியப் பகுதிகளை இந்தியாவுடன் இணைத்து விடவேண்டும். இதற்கு பிரெஞ்சு அரசாங்கம் மறுத்துவிட்டால், பிரெஞ்சிந்தியாவில் நடைபெறும் போராட்டத்துக்கு ஆதரவாக இந்திய மக்களும் போராட்டத்தில் ஈடுபடவேண்டிய அவசியம் நேரிடும்.

வாக்கெடுப்பு என்பது அவசியமற்ற முறையாகும், உடனடியாக பிரெஞ்சு ஆதிபத்தியம் வெளியேறி, இணைப்புத் தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும். பிரெஞ்சிந்திய மக்களைக் கட்டாயப்படுத்த, பிரெஞ்சு அரசாங்கம் உபயோகிக்கும் முறைகள் அருவருப்பானவை கண்டிக்கத் தக்கவை.

பிரெஞ்சிந்திய பகுதியிலும், இந்தியாவிலும் உள்ள எல்லா கட்சிகளும் புதுவை — காரைப் போராட்டத்துக்கு ஆதரவாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், அந்த போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வேண்டிய உதவிகளை அளிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

இலங்கைத் தமிழர் நவரத்தினசாமி

நீச்சலில் முதல் உலகத்தவராளுர்

44 வயதுள்ள எம். நவரத்தினசாமி என்கிற இலங்கைத் தமிழர் வட இலங்கையிலுள்ள வெள்வேட்டித் துறையிலிருந்து கோடிக்கரை வரையில் 37 மைல் நீளமுள்ள 'பாக்' நீரிணையை வெற்றிகரமாக நீந்திக் கடந்தார் என்று தெரிகிறது.

இவர் இதில் அதிக தூரம் நீந்திய முதல் உலகத்தவர் ஆவர். அதுவுமல்லாமல் இவர் 'பாக்' நீரிணையை நீந்திக் கடந்த முதல் வருமாவார்.

இவர் 15 மைல் தூரத்தை 17 மணி நேரத்திலும், 22 மைல் தூரத்தை இருபது மணி நேரத்திலும் நீந்திக் கடந்து வந்தாரென்றும் அறிவிக்கப்படுகிறது

பதனீர் இறக்க அனுமதி தராதே!

—:0:—

மதுவிலக்கு மந்திரிக்கு காங்கிரஸ் கட்சி தாக்கீது

கர்னூல், மார்ச் 28—

ராமமூர்த்தி கமிட்டியின் மதுவிலக்கைப் பற்றிய சிபார்சுகளை காங்கிரஸ் காரியக் கமிட்டி முடிவு செய்யுமுன், பதனீர் இறக்க அனுமதி சீட்டுகள் வழங்க வேண்டாமென ஆந்திர மதுவிலக்கு மந்திரிக்கு சட்டசபை காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

ஏஜண்டு தேவை

1—4—54 முதல் பாண்டிச்சேரியில் நமது 'நம் நாடு' இதழ்கள் விற்பனை செய்ய பிரதி ஒன்றுக்கு ரூ 2 வீதம் முன்பணம் செலுத்தக்கூடிய ஏஜண்டு தேவை, உடன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி, 'நம் நாடு,'
அறிவகம், சென்னை-13.

பூடானில் மனித வேட்டை!

★

பூடான் சமஸ்தானத்திலே நடைபெற்றுவரும் விடுதலை இயக்கத்தை ஒடுக்க, மன்னர் சர்க்கார், கடுமையான அடக்குமுறை வீசுகின்றனர். விடுதலை இயக்கத்தவர், பூடானிகளல்ல. பெரும்பாலான தலைவர்கள் நேபாளிகள் என்ற சாக்கு கூறிக்கொண்டு, சர்க்கார் மனித வேட்டை ஆடுகிறது. விடுதலை இயக்கத்தை ஒடுக்கும் இந்த பூடான் மன்னருக்குத்தான் சென்ற திங்கள், டில்லியில் காங்கிரஸ் சர்க்கார், 'பாரத் பூஷண்' என்ற பட்டமளித்து, விழா கொண்டாடிற்று. விடுதலை இயக்கத்தை ஒடுக்கும் பூடானுக்கு, பண உதவி தருவதாகவும் பண்டித நேரு, வாக்களித்திருக்கிறார்.

பூடான் சர்க்காரின் அடக்குமுறை காரணமாக 3 விடுதலை இயக்க ஊழியர்கள் பூடான் பட்டாளத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் பூடான் விடுதலை இயக்கம், அசாமில் அமைக்கப்பட்டு, மும்முரமாக பணியாற்றி வருகிறது.

இலங்கையில் ......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மேற்படி இயக்கத்தில் முக்கியமாக ஈடுபட்டிருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு 'தேசாபிமானம்' ஆசிரியர் திரு. கே. இராமநாதனுக்குக் கிடைத்த அனுபவம் கிடைக்கக் கூடும் என்று சொல்லப்படுகிறது.

இயக்கப் புத்தகங்களையும், பத்திரிகைகளையும் அதிகமாய் விற்பனை செய்யும் புத்தக விற்பனையாளர்கள்மீது விசேட கவனம் செலுத்தப்படுகிறதென்பதும், அப்பிரசுரங்களை விற்பனையாகாமல் தடை செய்வதன்மூலம் இயக்கத்தையே இங்கு ஒழித்துக்கட்டி விடலாமென்ற எண்ணம் நிலவுவதும் வெளிப்படையாகத் தெரிகிறது.

போலீசார் தம் ஸ்தாபனத்திற்குத் தரும் விளம்பரத்தின் மூலம் அதனையறிந்து தொடர்பு கொள்ள அனுதாபிகளுக்கு நிறைய சந்தர்ப்பம் மேற்படுகிறதென்று இயக்க உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

★★★★★★★★★★★★★★★★★★

"காதல் ஜோதி" தடை

செய்தி, சரியல்ல!

பொதுச்செயலாளர் அண்ணாதுரை தீட்டிய 'காதல் ஜோதி' நாடகத்தைச் சர்க்கார் தடைசெய்திருப்பதாக சென்னை தினசரி யொன்றில் வந்த செய்தி உண்மையல்ல அவ்வித உத்தரவு எதுவும் சர்க்காரிடமிருந்து பிறப்பிக்கப்படவில்லை யென்று, தெரியவருகிறது.

இதுபற்றி சேலம் மாவட்டக் கழகத்தார் அனுப்பியுள்ள செய்தியில், "நாமக்கல் வட்டாரத்தைச் சேர்ந்த எருகம்பட்டியில் பொதுவாக ஒரு மாத காலத்துக்கு 144 போடப்பட்டிருப்பதாகவும், அதனால் கழக நாடகமும் மாற்றுக் கட்சிக்காரர்களின் நாடகமும் நடைபெறாமல் தடுக்கப்பட்டதாகவும்," தெரிவித்திருக்கின்றனர்.

★★★★★★★★★★★★★★★★★

திரு. வி. க. நினைவு நிதியளிப்பு பொதுக் கூட்டம்

★

தட்சிண இரயில்வே, சென்னை-3 தமிழ்க் கலை மன்றச் சார்பில், 30—3—54 மாலை 5 மணிக்கு, கோகலே மண்டபத்தில், திரு அன்புகணபதி தலைமையில் நடைபெறும். திரு ரா. பி. சேதுப் பிள்ளை, திரு. டாக்டர் மு வரதராசனார் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

நேபாளத்தில் வேலை நிறுத்தம்

காட்மாண்டு, மார்ச் 28—

சென்ற மாதம் 14-ந் தேதி மன்னர் வெளியிட்ட பிரகடனத்தை எதிர்த்து நேப்பாளக் காங்கிரஸ் ஒரு நாள் பொது வேலை நிறுத்தம் செய்தது. அமைதியைக் காப்பதற்காக சில முக்கிய இடங்களில் ஆயுதக் காவலாளரும், தடிகளுடன் போலீசாரும் தயாராக நின்றிருந்தனர்.

கடைகளை அடைக்கும்படி வியாபாரிகளை மிரட்டியதாகவும், போக்குவரத்துத் தடங்கல் செய்ததாகவும் 4 பேரை போலீசார் கைது செய்தனர்.

பேராசையா ?

காராச்சி, மார்ச் 28—

இந்திய ரிசர்வ் பாங்கி, வெளியீடு இலாகாவில் பாகிஸ்தானின் சொத்துக்கள் ரூ 176 கோடியே 75 லட்சம் உள்ளதென்றும், இதில் 49 கோடி 8 லட்சம் மதிப்புள்ள ரூபாய் இந்தியா தர வேண்டிய பாக்கி என்றும் பாக். பார்லிமெண்டில் நிதி மந்திரி தெரிவித்தார்.

தஞ்சை மாவட்ட 2-வது தி. மு. கழக மாநாடு

நேபாள காங்கிரஸ் தலைவர் கைது!

காட்மாண்டு, மார்ச் 28—

நேப்பாள காங்கிரஸ் தலைவர் பி. பி. கொய்ராளாவும் கட்சித் தலைவர் உபாத்தியாவும், காடு மெட்கல் மைதானத்தில் ஒரு எதிர்ப்புக்கூட்டம் நடத்தபோது கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

மன்னரை ...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கூடாது! அரசியல் கட்சிகளை பணிபுரிய வேண்டும்! அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடைபெற வேண்டும்! மக்களாட்சி ஜூலை மாதத்தில் மலர வேண்டும்!" என்று நகீப் முழக்கமிடுகிறார்.

நாசீர், "இது, நாட்டுக்குக் கேடு செய்யும்; பிரிட்டிஷ் பிடியை வலுப்படுத்தும்," என்று கூறுகிறார்.

தடை செய்யப்பட்டுக் கிடந்த அரசியல் கட்சிகளை எல்லாம் மீண்டும் பணி புரியவிடப் அனுமதித்துவிட்டதால், ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு பக்கம் நின்றுமுழக்கமிடுகின்றன.

'கொரான் ஆட்சி'யை அமைப்போம், என்ற முழக்கமே, கட்சி முழக்கங்களிலே அதிக வலிவுடையதாக இருக்கிறது.

தரைப் படையும், கப்பற் படையும், ஒருவகையான 'ஒத்துழையாமை'யை நடத்திவருகின்றன. தரைப் படைத் தலைவர்களிலே முக்கியமானவர்கள் நாசீர் பக்கம்; எனவே அவர்கள் இராணுவ ஆட்சியை நீக்குவதாக நகீப் பிறப்பித்த உத்திரவை ரத்து செய்தாலொழிய, தாங்கள் பாசறையை விட்டு வெளியே வரப்போவதில்லை என்று கூறிவிட்டனர்.

கப்பற் படையினர், எகிப்திய துறைமுகத்தை விட்டு வெளியே கிளம்பிவிட்டனர். நாசீர் திட்டம் வெற்றிபெற்றாலொழிய, பணி புரியப்போவதில்லை என்று கப்பற் படையினரும் கூறுகின்றனர்.

'நாசீர் ஒழிக! மக்களாட்சி வாழ்க!!'-என்ற முழக்கமிடும் ஊர்வலம் ஒரு சமயம்; 'நகீப ஒழிக! ராணுவம் வாழ்க!!' என்ற முழக்கமிடும் ஊர்வலம் மற்றோர் சமயம்—இப்படி மாறி மாறி நடைபெறுகிறது

மன்னர் பரூக்கை விரட்டிய மாவீரர்களிடையே மூண்டுவிட்ட பகையைப் போக்கி சமரசம் காண, சவுதி அரேபியா மன்னர் இப்போது செய்ரோவில் தங்கி முயற்சித்து வருகிறார்.

★

தொண்டர்களுக்கு அறிவிப்பு

"ஏப்ரல் 10, 11-ந் தேதிகளில் தஞ்சையில் நடைபெற இருக்கும் மாநாடுகளில் தொண்டராகப் பணியாற்ற விரும்புவோர், 'தொண்டர் படைத் தலைவர், தஞ்சை மாவட்ட தி. மு. க. மாநாட்டுக் காரியாலயம், தஞ்சை,' என்ற முகவரிக்குத் தங்கள் பெயர்களையும், விலாசங்களையும் அனுப்பிவைக்கக் கோருகிறோம்.

"தொண்டர்கள் தஞ்சை வந்து போகும் செலவை அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். அவரவர்கள் ஊர்க் கிளைச் செயலாளரின் சிபார்சுக் கடிதம் பெற்று அனுப்ப வேண்டும்.

"ஏப்ரல் முதல் தேதிக்குள் மேற்சொன்ன விபரங்களை எழுதி அனுப்பிவைக்குமாறு கோருகிறேன்," என்று, தொண்டர் படைத் தலைவர் தோழர் அடைக்கலம் அறிவிக்கிறார்.

★

தீர்மானங்கள்

வரவேற்புக் குழுவினர் அறிவிப்பதாவது :—

"மாநாடுகளுக்குத் தீர்மானங்கள் அனுப்புவோர் ஏப்ரல் 3-ந் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி :—" ஏ. வி பதி, செயலாளர், தஞ்சை மாவட்ட தி. மு. க, மாநாடுகள், தஞ்சை."

* * *

உணவு ஏற்பாடுகள்

"மாநாடுகளில், உணவு வசதிகள் தனியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது; விருதுநகரிலிருந்து ஆட்கள் உணவு தயாரிக்கவும், பரிமாறவும் வருகின்றனர்.

"மாநாடு டிக்கட்டுகள் வாங்குவோர் உணவுக்குத் தனி டிக்கட்டுகள் பெற வேண்டும். சனிக்கிழமை மத்தியானம், இரவு, ஞாயிற்றுக்கிழமை மூன்று வேளைகளும் உணவுக்கு ரூ 2—8—0 ஆகும். டிக்கட்டுகள் பெறும் தோழர்கள் உணவு டிக்கட்டுகளைத் தனியாகப் பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்,"

* * *

வேண்டுகோள்

"ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த தோழர்கள் தங்கள் பெயரையும், விலாசத்தையும் உடனடியாக, 'செயலாளர், வரவேற்புக் குழு, தி. மு. க. இரண்டாவது மாநாடு, சென்னை,' என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

"நகரக் கிளை, சிற்றூர்க் கிளைச் செயலாளர்கள் உடனடியாக அவைகளைச் சேகரித்தனுப்ப வேண்டுகிறோம்."

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சென்னை—ராயப்பேட்டை திருவள்ளுவர் மன்றம்	8—8—0
சேலம்—செவ்வாய்பேட்டை கே. என். குப்புசாமி	5—0—0
பெங்களூர் தி மு கழகம் பொதுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் வசம், (முன் நேரில் கொடுத்த 100 சேர்த்து) விவரம் பின்னும்	326-11—8
திருவண்ணாமலை தி மு கழகம், பொதுச் செயலாளர் வசம்	301—0—0
,, பொதுக் கூட்டத்தில் உண்டி வசூல்	46-11—3
,, தனிப்பட்ட கிளைகள் (விவரம் தனியாக)	79—9—0
எம். ஜி ராமச்சந்திரன் (நடிகர்) அவர்கள் சுற்றுப் பயணத்தின்போது கையெழுத்து வாங்கிய அன்பர்கள் மூலம்	11-12—0
சென்னை 28-வது வட்டம் ந. நாயகம், குப்புசாமி முதலியோர்	3-13—0
பொள்ளாச்சி விஜயராகவன்—ராஜம் பாள் திருமண நன்கொடை காஞ்சி கல்யாணம் மூலம்	5—0—0
ஆக மொத்தம் ரூ. ...	25 227—11—5

(மேலும் தொடர்ந்து வெளிவரும்)

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.